19.06.2026
O.S.No. 41/2021
P.W. 1–ஜேசுராஜ்

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் :**

**1.** நீங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்றும் உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் சர்வே எண் என்ன என்றால் 56/3/1B ஆகும். வழக்கு சொத்து நஞ்சையா புஞ்சையா என்றால் புஞ்சை. சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் மொத்தம் 1 ஏக்கர் 22 செண்டில் தாவா சொத்து 93 செண்ட் ஆகும். 93 செண்டிற்கான நான்குமால் என்ன என்றால் தாவா சொத்திற்கு தென்புறம் எனது தந்தை மைக்கேல் இடம், கிழக்கே இன்னாசி வகையறா இடம், வடபுறம் ராசு வகையறா இடம், மேல்புறம் சேசு வகையறா இடம் ஆகும்.

2. தாவா சொத்து உங்கள் தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டதா அல்லது கிரையபாத்தியப்பட்டதா என்றால் பூர்வீக பாத்தியப்பட்டது. பூர்விக பாத்தியம் என்பதை நிரூபிக்கும் பொருட்டு SLR, UDR ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை, எனது தகப்பனார் பெயரில் 2020 வரை இருந்த கணினி பட்டா நகலை தாக்கல் செய்துள்ளேன். உங்களது தகப்பனார் பெயரில் இருந்த கணினி பட்டாவின் எண் என்ன என்றால் ஞாபகவில்லை. பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய பிறகு தற்சமயம் உள்ள பட்டா எண் என்ன

என்றால் தெரியாது. தாவா சொத்திற்கான தற்போதுள்ள அடங்கல் அல்லது 10(1) ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவா சொத்தை பொருத்து பத்திரபதிவு ஏற்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ள வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு எந்த ஆவணமும் ஏற்படவில்லை என சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3வது பக்கத்தில் உங்கள் தந்தையை பராமரிக்க வேண்டும் என்றும், உடன்பிறந்த சகோதரிகளுக்கு செய்ய வேண்டிய சீர் வரிசைகளை செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. அந்த உடன்படிக்கையின்படி உங்கள் தந்தையை நீங்கள் பராமரிக்கவும் இல்லை, உங்களது சகோதரிகளுக்கு சீர்வரிசையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் என்ன வேலை பார்த்தீர்கள் என்றால் காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நீங்கள் தற்சமயம் எங்கு வசித்து வருகீறீர்கள் என்றால் சென்னையில் வசித்து வருகிறேன். சென்னையில் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறீர்கள் என்றால் 2011 டிசம்பர் முதல் வசித்து வருகிறேன். நீங்கள் வெளியூரில் இருந்த சமயத்தில் உங்கள் தகப்பனாரை பராமரித்தது யார் என்றால் நான் தான் பராமரித்தேன்.

5. உங்கள் தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் 16.09.2013ல் இறந்தார். உங்கள் தகப்பனாரின் இறப்பு வயோதிகத்தின் காரணமாகவா அல்லது நோய் காரணமாகவா என்றால் விபத்தின் காரணமாக இறந்தார். உங்கள் உடன் பிறந்த சகோதரிகள் மூவரையும் வெளியூரில் தான் திருமணம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு இதே நீதிமன்றத்தில் உங்கள் சகோதரிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

6. மேற்படி வழக்கில் இந்த தாவா சொத்து தவிர வேறு பல சொத்துக்களையும் சேர்த்திருந்தார்கள் என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.3 ஆவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, தாவா சொத்தையும் சம்பந்தபடுத்தியுள்ளார்கள். தாவா சொத்தை 2004ம் ஆண்டு எனது தகப்பனார் பிரதிவாதிக்கு பதிவு செய்த கிரையம் செய்துள்ளார் என்றால் இல்லை, 2020ல் தான் எனக்கு தெரியும். அந்த ஆவணத்தின் நகலை உங்கள் தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து உட்பட உங்கள் தகப்பனார் பெயரில் உள்ள இதர சொத்துக்களையும் தற்போது வரை நீங்கள் தான் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் அனுபவம் செய்யும் அனைத்து நிலங்களும் நெல் விவசாயம் செய்யும் நிலங்கள் என்றால் சரிதான்.

7. அந்த விவசாய நிலங்களுக்கு பயிர்காப்பீடு செலுத்தி வருகிறீர்கள் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக பயிர்காப்பீடு செலுத்தி

வருகிறீர்கள் என்றால் 2013 முதல் செலுத்தி வருகிறேன். கிராம நிர்வாக அலுவரிடம் மூவிதழ் அடங்கல் பெற்று தான் பயிர் காப்பீடு செலுத்த வேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்து உட்பட சொத்துக்களுக்கு நீங்கள் செலுத்திய பயிர் காப்பீடு மூவிதழ் அடங்கலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.6ன் மூலம் உங்கள் தயார் மற்றும் தகப்பனார் உங்களுக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக தெரிவித்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.6 ஆவணத்ததில் எத்தனை இலக்க சொத்துக்களை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் புஞ்சை விவசாய இடம் 2, மனைக்கட்டு 3 ஆகும். வா.சா.ஆ.6ல் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றாா இல்லை அதற்கு முன்பே 1989ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தில் எனக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார்கள். 1989ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு ஆவணம் மற்றும் 2003 இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் உங்கள் தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு வருவாய் துறை ஆவணங்களை உங்கள் பெயரில் மாற்றிவிட்டீர்களா என்றால் இல்லை, எனது தகப்பனார் பெயரிலேயே இருக்கட்டும் என வைத்துள்ளேன்.

9. உங்கள் தகப்பனார் சொத்துக்களில் யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்ற விவரம் ஊரில் உள்ளவர்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் அபகரிக்கப்பட்ட சொத்தை மீட்டு கொடுக்கவும், இதர

பரிகாரங்களுக்ககாவும் தாக்கல் செய்துள்ளேன். உங்களுக்கும் உங்கள் உடன் பிறந்த சகோதரி ரெஜினாமேரி, இருதயமேரி, அமலோற்பவம் ஆகியோர்க்கும் பேச்சு வார்த்தை உள்ளதா என்றால் ஆரம்பத்தில் இருந்தது தற்போது இல்லை. 2003ல் உங்களுக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்பட்ட விவரம் உங்கள் சகோதரிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களுக்கு தெரியாது அதனால் தான் 2013ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல, என்னை 1வது தரப்பினராகவும் எனது தகப்பனாரை 2வது தரப்பினராகவும் சேர்த்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

10. பாகம் கேட்டு மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை இடையூறு செய்யக்கூடயாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருந்தாகள் என்றால் கற்பனையாக பாகம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டு அதில் தாவா சொத்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார்கள். தாவா சொத்தை தவிற உங்கள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களை நீங்களும் உங்கள் சகோதரிகளும் பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறீர்கள் என்றால் தவறு.

11. 03.12.2020ம் தேதி சார்பதிவாளர் அலுவலகம் சென்று நகல் எடுத்து பார்த்தபோது தான் கிரையம் பெற்ற விவரம் தெரிய வந்ததாக வழக்குரையில் தெரிவித்துள்ளது தவறு என்றால் 2018ம் ஆண்டு மே மாதம்

நான் விவசாயத்திற்கு சென்று பார்த்தபோது அவர்கள் விவசாயத்திற்கு தயாராக இருந்தார்கள், அதே ஆண்டு 8வது மாதம் சென்றபோது நடுவை செய்து கொண்டிருந்தார்கள் நான் விசாரித்ததற்கு கிரையம் பெற்றிருப்பதாக தெரிவித்தார்கள், நான் நடவடிக்கை எடுத்து நகல் எடுத்து பார்ப்பதற்கு 2020ம் வரும் ஆகிவிட்டது.

12. தாவா சொத்து உங்கள் தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் கிரையம் மூலம் பாத்தியம் என்றாலும் சரியல்ல. அதனால் தான் இவ்வழக்கில் நீங்கள் SLR. UDR வில்லங்க சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்யும்போது எனது கையில் இருந்த அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் வெளியூரில் வசித்தபோது உங்கள் தகப்பனாரை சரிவர பராமரிக்காததால் 2004ம் ஆண்டு மருத்துவ மற்றும் இதர செலவினங்களுக்காக தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல, நான் தான் பராமரித்து வந்தேன். 2004ம் ஆண்டு கிரையம் பெற்ற தேதி முதல் தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும், வருவாய்துறை ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

13. தாவா சொத்தின் உண்மையான அரசு வழிகாட்டுதல் மதிப்பை மறைத்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, சரியான மதிப்பீடு தாக்கல் செய்துள்ளேன். அதனால் இவ்வழக்கு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது**.

(ஓம்/திருமதி.S.ரேவதி)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை